முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

O.S.No.253/2025 பெயர் : ஆனந்தகுமார் நாள் : 13.07.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1: வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தை நான் படித்துப் பார்த்தேனா என்றால், படித்துப் பார்த்தேன். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் எங்களுக்கு B ஷெட்யூல் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். B ஷெட்யூல் சொத்துக்களில் ஆறுமுகம் பிள்ளை வீதியில் உள்ள முதல் வீடு மற்றும் அதன் பொது வழித்தடம், மெத்தை வாசல்படி, போர் மோட்டார், நல்ல தண்ணீர் மோட்டார் ஆகியவை பொதுவில் உள்ளது. எங்களுக்கு ஒதுக்கப்பட்ட முதல் வீட்டின் விஸ்தீரணம் சரியாக எனக்கு தெரியவில்லை, பத்திரத்தில் உள்ளபடி எங்களுக்கு பாத்தியம். அதன் சொத்து மதிப்பு எவ்வளவு என்றால், எனக்கு தெரியாது. B ஷெட்யூலை தவிர என் தந்தைக்கு வேறு என்ன சொத்து ஒதுக்கப்பட்டது என்றால், 34, வடக்கு சின்ன மாரியம்மன் கோவில் வீதியில் உள்ள இடத்துடன் கூடிய வீட்டின் கீழ்தளம் 428-3/4 சதுரடி, ராசிபுரம் - நாமக்கல் பைபாஸ் சாலையில் புதுச்சத்திரத்தில் உள்ள 1200 சதுரடி காலிமனை, சொத்து மதிப்பு அப்போது ரூ.20,000/- தற்போதைய மதிப்பு எனக்கு தெரியவில்லை. C ஷெட்யூலில் யார் யாருக்கு என்னென்ன சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால், 34, வடக்கு சின்ன மாரியம்மன் கோவில் வீதியில் உள்ள இடத்துடன் கூடிய வீட்டின் மேல்தளம் முழுவதும் 857-1/2 சதுரடி முழுவதும் கலாராணிக்கு ஒதுக்கப்பட்டது. C ஷெட்யூல் சொத்து மற்றும் தாவா சொத்துக்கள் ஆகியவை என் தந்தையும், கமலாட்சியும் சேர்ந்து வாங்கியது என்றால், சரிதான். மேற்படி சொத்தில் என் தந்தைக்கு பாதி பாகம் பாத்தியம் என்றால், சரிதான். C ஷெட்யூலில் என் தந்தைக்கு 428-3/4 சதுரடி பாத்தியம், மேற்படி 428-3/4

சதுரடி 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு நாச்சிமுத்துவின் வாரிசுகள் என்ற அடிப்படையில் பாத்தியம் என்றால், சரியல்ல. C ஷெட்யூல் சொத்துக்களில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 1/4 பங்கு தான் உரிமை உள்ளது என்றால், சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**